தீக்கதிர்

19.02.08

# சம்பக்குளம் மயானம் தொடர்ந்து செயல்படும்

மதுரை, பிப்.18-

மதுரை சம்பக்குளம் மயானம் தொடர்ந்து செயல் படும் என மாவட்ட ஆட்சியர் எஸ்.எஸ்.ஜவஹர் அறிவித் துள்ளார்.

மதுரை சம்பக்குளத்தில் கடந்த 150 ஆண்டுகளாக பொதுமக்கள் பயன்படுத்தி வந்த மயானத்தை, தனிநபர் நலனுக்காக ஆக்கிரமிக்க முயற்சி நடைபெறுவதை கண்டித்து கடந்த சில நாட் களாக அப்பகுதி மக்கள் போராடி வந்தனர்.

இந்நிலையில் ஞாயிறன்று இரவு மாவட்ட ஆட்சியர் ஜவ ஹர் மீண்டும் மயானம் அதே இடத்தில் செயல்படும் என அறிவித்துள்ளார். அத்துடன் மயானத்தில் இருந்த கூரை, அடிகுழாய் மீண்டும் அமைத் துத்தரப்படும். அத்துடன் இவற்றை சேதப்படுத்தியவர் கள் மீது நடவடிக்கை எடுக்க மாநகராட்சிக்கு அவர் உத்தர விட்டுள்ளார்.

**சிபிஎம் பாராட்டு**

மதுரை கோ.புதூரில் உள்ள சம்பக்குளம் மயானம் தொடர்ந்து செயல்பட உத்தர விட்டுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் ஜவஹருக்கு மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பாராட்டு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கட்சியின் மாநகர் மாவட்டச்செயலாளர் இரா. அண்ணாதுரை வெளி யிட்டுள்ள அறிக்கை வருமாறு:

மதுரை மாநகர் 4வது வார்டு சம்பக்குளம் மயானம் பிப்-13 ந் தேதியன்று இரவு அவசரமாக அகற்றப்பட்டது. இதனையொட்டி சம்பக்குளம் மக்கள் ஒன்றுதிரண்டு கடந்த ஒரு வாரகாலமாக உறுதியாக போராடி வந்தனர். இப்போராட் டத்திற்கு மார்க்சிஸ்ட் கட்சி ஆதரவு தெரிவித்தது.

கடந்த பிப்-17 நதேதியன்று இரவு, மாவட்ட ஆட்சியர் இப்பிரச்சனையில் தலையிட்டு சம்பக்குளம் மயானம் அதே இடத்தில் தொடர்ந்து செயல் படும் என்றும், மயானக்கூரை, அடி குழாய்களை சேதப் படுத்தியவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்துள்ளது மகிழ்ச்சிக் குரியது.

இது மக்களின் உறுதிமிக்க போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி என்றும், இக்கோரிக் கையை ஏற்றுக்கொண்டு அறி வித்த மாவட்ட ஆட்சியருக் கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாநகர் மாவட்டக்குழு சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் சுற்றுச்சூழலை பாது காக்கும் வகையில் எதிர் காலத்தில் அதனை மின் மயானமாக மாற்ற நடவடிக் கை எடுக்க வேண்டுமென கேட் டுக்கொள்கிறோம். இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள் ளார்.